

கடலூர் மாநகர திமுக சார்பில் , கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் அன்று பிறந்த குழந்தைகளுக்கு , மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம் .ஆர் .கே. பன்னீர்செல்வம், ,மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு மோதிரம் அணிவித்தனர் . மேலும் பிரசவ வார்டு மற்றும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மகளிர்களுக்கு உணவு ,பிரட், புடவைகள் உள்ளிட்ட நலத்திட்டங்களை வழங்கினர். இந்நிகழ்வில் கடலூர் மாநகர கழக செயலாளர் கே எஸ் ராஜா, மாநகர மேயர் சுந்தரி ராஜா உள்ளிட்ட மாநகர கழக நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள், சார்புஅணி நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் பேபி மஹாலில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பகுத்தறிவு சீத்திருந்த செம்மல் – கலைஞர் சிறப்பு மலரை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர்.காந்தி, தலைமைச்செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் குமரவேல் பாண்டியன், து.மு.கதிர் ஆனந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எ.பி. நந்தகுமார். ப.கார்த்திகேயன். அமுலு விஜயன், வில்வநாதன், ஜே.எல்.ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் .பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பல்கலைக் கழக வேந்தர் விவகாரம்:

# கவின் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசியல் நாகரிகம் காத்துள்ளார்!

## “தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்கு பாராட்டு!

சென்னை, நவ. 29 -

கவின் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்கலைக் கழக வேந்தர் விவகாரத்தில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அம்மையாரை புகழ்ந்துரைத்து அரசியல் நாகரிகம் காத்தார். இது குறித்து “தினத்தந்தி” நாளேடு தலையங்கம் எழுதி முதல்வரை பாராட்டியுள்ளது.

அது வருமாறு:

தமிழ்நாட்டில் 13 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இந்த பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக கவர்னர் இருக்கிறார். துணைவேந்தர்களாக அரசு நியமிக்கும் தேடுதல்குழு பரிந்துரை செய்யும் பட்டியலில் இருந்து ஒருவரை வேந்தர் என்ற முறையில் கவர்னர் தேர்ந்தெடுத்து அறிவிப்பார். இணைவேந்தராக சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இருக்கிறார். இதுதவிர,




தமிழ் வளர்ச்சித்துறையின்கீழ் வரும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்துக்கு மட்டும் கவர்னர், வேந்தராக இல்லை. முதல்–அமைச்சரே வேந்தராக இருக்கிறார். கவர்னராக இதற்கு முன்பு பன்வாரிலால் புரோகித் இருந்தபோதும், இப்போது கவர்னராக ஆர்.என்.ரவி இருக்கும்போதும் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் அரசுக்கும், கவர்னருக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும், கவர்னருக்கு பதிலாக முதல் - அமைச்சரே வேந்தராக இருக்கும் வகையில், மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கவர்னர் நீண்டகாலமாக கிடப்பில் போட்டு வைத்திருந்தார். இதைத்தொடர்ந்து தமிழக அரசு, சுப்ரீம்கோர்ட்டு கதவுகளைத் தட்டியது. அந்த வழக்கு தொடர்பாக தீர்ப்பு வரும்முன்பு கவர்னர் இந்த 10 மசோதாக்களை நிறுத்தி வைத்திருப்பதாக தெரிவித்து திருப்பி அனுப்பினார். உடனே தமிழக அரசு சிறப்பு சட்டசபையைக்கூட்டி அதே மசோதாக்களை மறுபடியும் நிறைவேற்றி அனுப்பியது. அரசியல் சட்டப்படி கவர்னரால் திருப்பி அனுப்பப்பட்ட மரோதாக்கள் மீண்டும் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு அனுப்பினால், அதற்கு கவர்னர் ஒப்புதல் அளித்தாக வேண்டும். இந்த வழக்கு விசாரணையின்போது தமிழக, கேரள கவர்னர்களுக்கு சுப்ரீம்கோர்ட்டு கடும் கண்டனங்களை தெரிவித்தது. ஆக தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் முதல்அமைச்சரே வேந்தராக ஆகுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது.

இந்தநிலையில் முதல்அமைச்சர் வேந்தராக உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டம் வழங்கியதோடு மட்டுமல்லாமல், பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கும், இசை அறிஞர் பி.எம். சுந்தரத்துக்கும் டாக்டர் பட்டம் வழங்கினார். இந்த விழாவில் அவர் பேசும்போது, “இந்தியாவிலேயே இசைக்காக உருவாக்கப்பட்ட ஒரே பல்கலைக்கழகம் என்ற பெருமை இந்த பல்கலைக்கழகத்துக்கு உண்டு. மற்றொரு சிறப்பு, இந்த பல்கலைக்கழகத்துக்குத்தான் முதல் அமைச்சரே வேந்தராக இருக்கும் உரிமை இருக்கிறது. இப்படி முதல்அமைச்சர்களே வேந்தர்களாக இருந்தால்தான், பல்கலைக் கழகங்கள் சிறப்பாக வளரமுடியும். மற்றவர்கள் கையில் இருந்தால் அதன் நோக்கமே சிதைந்து போய்விடும் என்று நினைத்துதான், 2013ம் ஆண்டே இந்த பல்கலைக்கழகத்தின் வேந்தர் முதல்அமைச்சர்தான் என்று அன்றைக்கு முதல்அமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா முடிவு செய்திருந்தார். இதற்காக அவரை மனதார நாம் பாராட்டலாம். இப்போது இருக்கும் நிலையை நினைத்து நானும் மனமுவந்து பாராட்டுகிறேன்” என்று பேசினார். இதுதான் அரசியல் நாகரிகம். இத்தகைய அரசியல் நாகரிகம் தமிழ்நாட்டில் தழைத்து வர வேண்டும் என்றுதான் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். காமராஜர், அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆரிடம் இருந்த அதே அரசியல் நாகரிகம் இப்போது உயிர்பெற்றுவிட்டது. ஜெயலலிதாவை அம்மையார் என்று அழைத்து, அவரை மனதார வெளிப்படையாகவே பாராட்டிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் இந்த செயலை மக்கள் போற்றுகிறார்கள். அரசியலில் ஆயிரம் கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், அதையெல்லாம் தாண்டி இத்தகைய அரசியல் நாகரிகம் வளரவேண்டும். அதைத்தான் ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு’ என்று அறிஞர் அண்ணா சொல்லிக்கொடுத்துவிட்டு சென்றிருக்கிறார்.

இவ்வாறு “தினத்தந்தி” முதல்வருக்கு தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளது.

## சென்னை பெரியார் திடலில் நாளை நடைபெறுகிறது

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பிறந்த நாள் கருத்தரங்கம்!

## தஞ்சை கூத்தரசன் - மாம்பலம் சந்திரசேகர் - நா.சந்திரபாபு சிறப்புரை!

*சென்னை, நவ. 29 -*

*இது குறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி ஆ.வீரமர்த்தினி தன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:*

*சுழலுகின்ற உலகப் பந்தில் உள்ள ஞானிகளில் தலையாய பெருநாளை தந்தை பெரியாரின் சுயமரியாதைப் பாசறையான திராவிடர் கழகத்தின் சேய் அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், நாளை (30.11.2023 - வியாழக் கிழமை) மாலை 6.30 மணியளவில் சென்னை பெரியார் திடலிலுள்ள அன்னை ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் நடைபெறுகிறது.*

*பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவராகிய நான் (ஆ.வீரமர்த்தினி) அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன். தென். மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்த்தனம் முன்னிலை வகிக்கின்றனர். அரிமா முனைவர், நா.சந்திரபாபு தொடக்க உரை நிகழ்த்துகிறார். தஞ்சை கூத்தரசன் தலைமை ஏற்கிறார்.*

*“ஆசிரியர் .கி.வீரமணி” எனும் பொதுத் தலைப்பில் மாம்பலம்.சந்திரசேகர் (பல்கலைக் கழகம்) தக்கோலம் தேவபாலன் (இனமானக் காவலர்) அத்திப்பட்டு சாம்ராஜ் (பகுத்தறிவுப் பேரொளி) ஆவடி பாஸ்கர் (சொற்போர் மறவர்) ஆகியோர் அடைப்புக் குறியிலுள்ள துணைத் தலைப்புகளில் பேசுவர். ஆ. வெங்கடேசன் நன்றி நவில்வார். இவ்விழாவுக்கு அனைவரும் வருகை தர வேண்டுகிறேன்.*

*இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.*


## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!





# திருவண்ணாமலையில் புதிய பேருந்து நிலையப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

*திருவண்ணாமலை, நவ. 28-*

*திருவண்ணாமலையில் சேவை சாலை அகலப்படுத்துவது தொடர்பாக தலைமை பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளருடன் நேற்று முன்தினம் ஆய்வுப் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார்.*

*திருவண்ணாமலை வேலூர் சாலையில் மத்திய பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இந்த பேருந்து நிலையத்திலிருந்து வேலூர், ஆரணி, செய்யார், காஞ்சிபுரம், சென்னை, திருக்கோவிலூர், வேட்டவலம், திருச்சி, மதுரை உள்ளிட்ட பல் வேறு பகுதிகளுக்கு நூற்றுக் கணக்கான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.*

*மத்திய பேருந்து நிலையத்திற்கு உள்ளே வரும் பேருந்துகள் மற்றும் வெளியே செல்லும் பேருந்துகளால் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டு அதிகளவு பொதுமக்கள் வாகன ஓட்டிகள் சிரமப்ப ட்டு வருவதால் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று திருவண்ணா மலை திண்டிவனம் சாலை ரயில் நிலையம் அருகே புதிய பேருந்து நிலையம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டது.*

*தற்போது 30 கோடி ரூபாய் மதிப்பில் புதியதாக நவீன பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த பேருந்து நிலையத்தை தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமை பொறியாளர் சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர் பழனிராஜ், மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உட்பட அரசு அதிகாரிகள் ஆய்வு செய்தனர். குறிப்பாக பேருந்து உள்ளே வரும் வழிகள், பேருந்து வெளியே செல்லும் வழிகள் மற்றும் சேவை சாலை அகலப்படுத்துவது தொடர்பாகவும், பேருந்து நிலையம் அருகே உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாகவும் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.*

*இது மட்டுமல்லாமல் புதிதாக கட்டப்படும் பேருந்து நிலையத்திற்கு உள்ளே வரும் பேருந்துகள் மாற்று வழியில் சென்று திரும்ப பேருந்து நிலை யத்திற்கு வருமாறு உள்ளதை சிறு பாலம் கட்டி நேரடியாக பேருந்து நிலையத்திற்குள் பேருந்து வர ஆய்வு செய்யப்பட்டுள்ளது*

## மாவட்ட ஆட்சியர் அருண்தம்புராஜ் முன்னிலை - கடலூர் மஞ்சக் குப்பம் பகுதியில்

# அரசு இசைப் பள்ளி புதிய கட்டிடம் திறப்பு விழா!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தனர்!

*கடலூர், நவ. 29 -*

*நேற்று முன்தினம் (27.11.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ. அருண் தம்புராஜ், முன்னிலையில் கடலூர் மாவட்டம், மஞ்சக் குப்பம் பகுதியில் உள்ள தமிழ்நாடு அரசு மாவட்ட இசைப்பள்ளி வளாகத்தில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள இசைப்பள்ளி கட்டடத்தை திறந்து வைத்தனர்.*

*தொடர்ந்து, கடலூர் டவுன் ஹாலில் கலைப் பண்பாட்டுத் துறையின் வாயிலாக அரசு இசைப் பள்ளி புதிய கட்டட திறப்பு விழா, இசைப் பள்ளி 25ஆம் ஆண்டு வெள்ளி விழா மற்றும் தமிழிசை விழா ஆகிய முப்பெரும் விழாவை தொடங்கி வைத்து, இசைப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டனர்.*

*மேலும் முப்பெரும் விழாவை முன்னிட்டு நடைபெற்ற குறளிசை, நாதஸ்வரம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ/ மாணவியர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினர்.*

*அமைச்சர் பெருமக்கள் தெரிவித்ததாவது.*

*தமிழ் இசை, நாட்டியம் பயிலுவதை தமிழகமெங்கும் பரவலாக்கவும், இளைய தலைமுறையினருக்கு முறையான இசைக் கல்வியை வழங்கவும், தமிழ்நாட்டு இளைஞர்களை புகழ்மிக்க கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கலை பண்பாட்டுத்துறையின் கீழ் 1997, 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் ஆண்டுக்கு 5 மாவட்ட இசைப் பள்ளிகள் வீதம் 15 பள்ளிகளும், 2000ஆம் ஆண்டில் 2 பள்ளிகள் என மொத்தம் 17 மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. இப்பள்ளி 1998 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின் படி தோற்றுவிக்கப்பட்டது.*

*இப்பள்ளிகளில் குரலிசை, நாதஸ்வரம், தவில், தேவாரம் மற்றும் பரத நாட்டிய பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் கடலூர் இசைப் பள்ளியில் நாதஸ்வரம், தவில் பிரிவுகளில் அதிக மாணவர் எண்ணிக்கை இருந்தமையால் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.*

*2008ஆம் ஆண்டில் 17 மாவட்ட இசைப்பள்ளிகளிலும் வயலின், மிருதங்கம் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டது. 2010-2011ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 17 பள்ளிகளில் அதிக மாணவர்களை கலைஞர்களாக உருவாக்கிய பள்ளிகளில் முதலிடத்தில் கடலூர் மாவட்ட இசைப்பள்ளி விளங்குகிறது.*

*தற்போது கடலூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு ரூ.1.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும் என 2022-2023ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில் சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டு இப்பள்ளியின் 25ஆம் ஆண்டின் வெள்ளி விழா கொண்டாடும் இவ்வேளையில் சொந்த கட்டடம் திறக்கப் படுகிறது. கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. பண்பாட்டு பாசறை கலைஞர் எனும் தலைப்பில் சுற்றுலா, கலை பண்பாடு, அருங்காட்சியம், தொல்லியல் மற்றும் அறநிலையங்கள் துறை மூலம் பல நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் 100 இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப் படுகிறது. இன்று நடைபெறும் இவ்விழாவிலும் கலைஞரின் சங்கத்தமிழ் பாடல்கள் மற்றும் கலைஞர் அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் குறித்த நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறுகிறது என தெரிவித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.ராதாகிருஷ்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், இயக்குநர் கலை பண்பாட்டு துறை சே.ரா.காந்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) க.இளந்திரையன்அவர்கள்,இணை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர் கலை பண்பாட்டுத் துறை திருமதி.க.சிவசௌந்தரவல்லி, உதவி இயக்குநர், மண்டல கலை பண்பாட்டு மையம் த. செந்தில்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. அன்பழகன்

**நவம்பர் 29 (2022)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**பேரூர் வார்டு செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**மேச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி சங்க தலைவராகவும், மேச்சேரி கூட்டுறவு பட்டு கூட்டுறவு சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**